DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.21/2018**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | தர்மலிங்கம் | Caste: | |
| Father's Name: | சோனைமுத்தன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 20.09.2024.

(ஏ 2 எதிரி ஆஜர் .ஏ 1,ஏ 3,ஏ 4 எதிரிகள் ஆஜர் இல்லை. பிஎன்எஸ்எஸ் பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).

**முதன்மை விசாரணை**

நான் திருவாடனை தாலுகா பேராமங்கலம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் டைல்ஸ் வேலை செய்கிறேன். கருப்பையா என்னுடைய நண்பர். அவர் ஏஆர் மங்கலத்தை சேர்ந்தவர். சாட்சிகள் சோனைமுத்து, மாரி, முத்து ஆகியோரை தெரியும். 17.01.2017 அன்று பகல் சுமார் 1 மணியளவில் நானும் எனது கருப்பையாவும் பஸ்ஸில் திருவாடனை கைகாட்டியிலிருந்து சிவகங்கைக்கு போனோம். அங்கு சிவகங்கை பஸ் ஸ்டாண்டில் இறங்கியபோது திருவாடனை டிஎஸ்பி எங்களிடம் ராமனையும், சண்முகத்தையும் கைது செய்ய வேண்டும் அதற்கு சாட்சியாக இருங்கள் என்று சொன்னார். அதில் சண்முகம் தற்போது நீதிமன்றத்தில் இருக்கிறார். (சாட்சி ஏ 2 எதிரியை கைநீட்டி அடையாளம் காட்டினார்). இராமனை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். அங்கு இராமனையும் , சண்முகத்தையும் கைது செய்து விசாரித்து

கொண்டிருந்தார்கள். டிஎஸ்பி விசாரித்தபோது இராமன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை எழுதிக்கொண்டார்கள். அதில் நானும் , என்னுடைய நண்பர் கருப்பையாவும் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் இரண்டாவதாக இருப்பது அப்போது நான் போட்ட கையெழுத்துதான். அதற்கு மேலே இருப்பது என்னுடைய நண்பர் கருப்பையாவின் கையெழுத்து. ஏ 3 எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் **அ.சா.ஆ.3/அ.சா.6.** சம்பவத்தில் பயன்படுத்திய கம்பிகளை ஆஜர் செய்வதாக அப்போது இராமன் சொன்னார். அதன்பிறகு இராமனையும், சண்முகத்தையும் அழைத்துக்கொண்டு காளையார்கோவிலில் இருந்து திருவாடனை செல்லும் ரோட்டில் பானனேந்தல் விளக்கில் உள்ள பாலத்திற்கு கீழே அழைத்து சென்றபோது, அங்கிருந்து 4 இரும்பு கம்பிகளை இராமன் எடுத்து ஆஜர் படுத்தினார். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரும்புகம்பிகள்தான் ராமன் ஆஜர்படுத்தியது. (சாட்சி அடையாளம் காட்டிய 4 இரும்பு கம்பிகளும் சா.பொ.2 முதல் சா.பொ. 5 ஆக ஏற்கனவே குறியிடப்பட்டுள்ளது). அப்போது மதியம் 02.45 மணி இருக்கும். அந்த 4 கம்பிகளையும் போலீசார் கைப்பற்றிக் கொண்டதற்கு எழுதிக்கொண்டார்கள். அதில் நானும், என் நண்பர் கருப்பையாவும் சாட்சி கையெழுத்துப்போட்டோம். என்னிடம் காட்டப்படுவது அந்த கையெழுத்துதான். இதில் இரண்டாவதாக இருப்பது என்னுடைய கையெழுத்து. அதற்கு மேலே இருப்பது என்னுடைய நண்பர் கருப்பையாவின் கையெழுத்து. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சியின் கையொப்பம் **அ.சா.ஆ. 4/அ.சா.6.** இது சம்பந்தமாக திருவாடனை டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

பேராமங்கலம் கிராமத்தில் இருந்து பானனேந்தல் சுமார் 25 அல்லது 27 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. எங்கள் கிராமத்தில் இருந்து சிவகங்கை சுமார் 55 அல்லது 60 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. எங்கள் ஊரிலிருந்து திருவாடனை கைக்காட்டி சுமார் 15 அல்லது 20 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. எனக்கு நிரந்தர வேலை டைல்ஸ் ஒட்டுகிற வேலை. தினமும் சிவகங்கைக்கு டைல்ஸ் ஒட்டும் வேலைக்கு போவேன். அப்படி டைல்ஸ் ஒட்டும் வேலைக்கு சென்ற அன்றுதான் டிஎஸ்பி இராமனையும், சண்முகத்தையும் அங்கு பிடித்து வைத்திருந்தார். என்னை அன்றைய தினமே டிஎஸ்பி விசாரித்தார். டிஎஸ்பி விசாரித்தபோது நான் பேராமங்கலம் கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து விவசாயம் செய்து வருவதாக சொன்னேன். எனக்கு விவசாயம்தான் நிரந்தர தொழில் என்றும், எனக்கு டைல்ஸ் ஒட்டுகிற வேலை தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. சிவகங்கை பேருந்துநிலையம் அதிகமாக பேருந்துகள் வந்து செல்லும் இடம் என்றும், மக்கள் அதிகமாக அங்கு வந்து போவார்கள் என்றும் சொன்னால் சரிதான். இராமனையும், சண்முகத்தையும் சிவகங்கை பஸ் ஸ்டாண்டில் விசாரித்தபோது, அங்கு நிறைய பொதுமக்கள் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். பானனேந்தல் கிராமத்தில் எனக்கு தூரத்து சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். பானனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த மாரி மகன் சோனைமுத்து என்னுடைய உறவினர். இராமனையும், சண்முகத்தையும் விசாரித்தபோது அங்கிருந்த பொதுமக்கள் யாரையாவது சாட்சியாக இருக்கும்படி டிஎஸ்பி அழைத்தாரா என்று கேட்டால் நாங்கள் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது எங்களை அழைத்தார். வேறு யாரையும்

அழைக்கவில்லை. நாங்கள் அங்கு செல்வதற்கு முன்பு இராமனையும், சண்முகத்தையும் டிஎஸ்பி எப்போது பிடித்தார் என்று எங்களுக்கு தெரியாது. நாங்கள் அங்கு சென்றபோது டிஎஸ்பியுடன் எத்தனை போலீசார் இருந்தார்கள் நான் கவனிக்கவில்லை. நாங்கள் போவதற்கு முன்பு எழுதி வைத்திருந்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. என்ன எழுதியிருந்தது என்று எனக்கு படித்துக்காட்டினார்கள் அதுக்கூட எனக்கு சரியாக புரியவில்லை. அதை யார் எழுதியது என்று நான் கவனிக்கவில்லை. பேப்பரில் எழுதிக்கொண்டிருந்தார்கள் , யார் எழுதியது என்று நான் கவனிக்கவில்லை. சிவகங்கை பேருந்து நிலையத்தில் இருந்து பானனேந்தல் விளக்கு சுமார் 50 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்று சொன்னால் சுமார் 40 கிலோமீட்டர் தூரம் இருக்கும். பானனேந்தல் விளக்கு காளையார்கோவிலில் இருந்து திருவாடனை செல்லும் ரோட்டில் தெற்கே இருக்கிறது. பானனேந்தல் விளக்கில் இருந்து பானனேந்தல் கிராமம் சுமார் 4 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. பானனேந்தல் விளக்கிற்கு மேற்கு பக்கம் உப்பையூர் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. பானனேந்தல் விளக்கில் எப்போதும் ஆட்களும், மாணவர்களும் இருப்பார்கள் என்று சொன்னால் சரிதான். இரும்பு கம்பிகளை இராமன் எடுத்து கொடுத்தபோது சாட்சியாக இருக்கும்படி அந்த இடத்து ஆட்களையோ, மாணவர்களையோ போலீசார் அழைக்கவில்லை. இரும்பு கம்பிகளை கைப்பற்றிய பிறகு எதிரிகளையும், எங்களையும் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். காவல் நிலையத்திற்கு போன பிறகு அங்கு சுமார் அரை மணிநேரம் இருந்திருப்பேனா என்று கேட்டால் இருந்திருப்பேன். காவல் நிலையத்திலும் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன

நேரத்தில், சொன்ன இடத்தில் டிஎஸ்பி எங்கள் முன்னிலையில் யாரையும் கைது செய்யவில்லை என்றும், எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், எங்கள் முன்னிலையில் எந்த பொருளையும் எந்த எதிரியும் எடுத்து ஆஜர் செய்யவில்லை என்றும், அங்கு அத்தாட்சி தயார் செய்து போலீசார் கைப்பற்றவில்லை என்றும், நான் காவல் நிலையத்தில் வைத்துதான் அனைத்து கையெழுத்துகளையும் போட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. புகார்தாரர் சோனைமுத்து என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக போலீசார் சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/- S. Uthamaraj,
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)